புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | அக்டோபர் 05, 2017 | புரட்சி 16 | முழக்கம் 38 | விலை: ரூ.3.00

## உச்சநீதிமன்றத்தின் இரட்டை அணுகுமுறை

# ‘சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி கருத்துரிமையைப் பறிக்க முடியாது’–முன்னாள் நீதிபதி அரி பரந்தாமன் பேச்சு

***‘சட்டம் ஒழுங்கும் பொது ஒழுங்கும் வெவ்வேறானது’ என்று கூறிய முன்னாள் நீதிபதி அரி. பரந்தாமன், ‘சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி கருத்துரிமையைப் பறிப்பது அரசியல் சட்டத்துக்கு எதிரானது’ என்றார்.***

***மயிலாப்பூரில் செப்.26 அன்று நடந்த பெரியார் பிறந்த நாள் விழாவில் பங்கேற்று, சுயமரியாதை கால்பந்து கழக சார்பில் நடத்திய கால் பந்து போட்டிகளில் வெற்றி பெற்றவர் களுக்கு விருதுகளும் பரிசுகளும் வழங்கி, சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி அரி பரந்தாமன் ஆற்றிய உரை:***

“நீட் தேர்வு - அனிதாவை எப்படி சாகடித்தது என்பதை இங்கே ‘விரட்டு’ கலைக் குழுத் தோழர்கள் மிகச் சிறப்பாக நாடகமாக நடத்தினார்கள். அனிதாவின் மரணத்துக்கு முன்பாகவே நீட் தேர்வு குறித்து இந்த நாடகத்தை தோழர்கள் தமிழகம் முழுதும் நடத்தினார்கள் என்பதை அறிந்தபோது உண்மையிலேயே நான் மிகவும் நெகிழ்ந்து போய் விட்டேன். மிகப் பெரும் நடிகர்களால்கூட இவ்வளவு சிறப்பாக நடித்திருக்க முடியாது. அவ்வளவு சிறப்பாக நடித்தார்கள். இவர்களை அவசியம் பாராட்டியே ஆக வேண்டும்.

நீட் தேர்வு என்று ஒன்று அறிவிக்கப்பட்ட நாள் முதலே, பிரின்ஸ் கஜேந்திர பாபுவைப் போலவே நான் எதிர்த்து வருகிறேன். பெரியார் பிறந்த நாள் விழாவை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். 1879இல் பெரியார் பிறந்தார். 1891இல் அம்பேத்கர் பிறந்தார். மார்க்ஸ் பிறந்து 200 ஆண்டுகளாகின்றன. இந்த மூன்று தலைவர்களுமே இப்போது நமக்குத் தேவைப்படு கிறார்கள். இங்கே நாடகத்தில் நாம் பெரியார், அம்பேத்கர் தந்த சுயமரியாதை பாடத்தைப் படிப்போம் என்று சொன்னார்கள். மார்க்சையும் இவர்களுடன் இணைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் சமதர்மக் கொள்கைகளை இந்த மண்ணில் பரப்பியவர் பெரியார். மார்க்ஸ்-ஏங்கல்சின் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை 1931லேயே தமிழில் வெளியிட்டவர் பெரியார். இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் முதலில் அது வெளி வந்தது. இன்று பெரியாரின் சுயமரியாதை கொள்கை முன்னெப்போதையும்விட கூடுதலாக தேவைப்படுகிறது.

நீட் தேர்வை எதிர்த்து நாம் போராடினோம். ஆனால் இந்த ஆண்டு ‘நீட்’ நடந்துவிட்டது. அதன் காரணமாக நாம் தோற்றுவிட்டோம் என்று நான் கூற மாட்டேன். 1937இல் இந்தியை எதிர்த்துப் போராடினார் பெரியார். 1939இல் தான் இந்தி ஒழிந்தது. அதற்கு இரண்டு ஆண்டுகாலப் போராட்டம் தேவைப்பட்டது. அந்த காலத்தைவிட இப்போது துரோகிகள் அதிகம் என்பதாலும், தமிழக ஆட்சியாளர்களும் மத்திய அரசுக்கு துணைப் போகிறவர்களாக இருப்பதாலும், இப்போது மேலும் சில காலம் கூடுதலாக நாம் போராட வேண்டி யிருக்குமே தவிர, நாம் உறுதியாக நீட்டை ஒழிப்பதில் வெற்றி பெறுவோம். (கைதட்டல்)

நீட் வருவதற்கு முன்பே நாம் நுழைவு தேர்வு முறையைக் கொண்டு வந்து இந்தத் தேர்வு முறைகள் சரியாக இருக்குமா என்று பரிசோதனை செய்து பார்த்து விட்டோம். 1984இல் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது நுழைவுத் தேர்வைக் கொண்டு வந்தார். நுழைவுத்தேர்வு மதிப்பெண், பிளஸ் டு மதிப்பெண் இரண்டையும் சேர்த்து ‘கட் ஆப்’ மதிப்பெண் அடிப்படையில் நாம் மருத்துவ, பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களை சேர்த்து வந்தோம். 2006ஆம் ஆண்டு நுழைவு தேர்வு தேவை இல்லை என்று முடிவுக்கு வந்து அதை இரத்து செய்து விட்டோம். நாம் நடத்திய நுழைவுத் தேர்வால் மாநில பாடத் திட்டத்தில் 10ஆவது வரை படித்தவர்கள், 11ஆம் வகுப்பு வந்தவுடன் மாநில பாடத் திட்டத்துக்கு மாறினார்கள். இப்போது கூட ஏதோ ‘சி.பி.எஸ்.ஈ.’ என்றால் அது ‘உயர்ந்த ஜாதி’, மாநில பாடத் திட்டம் என்றால் ‘கீழ் ஜாதி’ என்பதுபோல் பேசுகிறார்கள். அப்படி எல்லாம் கிடையாது. இரண்டு பாடத் திட்டங்களும் வெவ்வேறானவை; அவ்வளவுதான்.



> **பேரறிவாளனை விடுதலை செய்க!**
>
> பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்று நீதிபதி அரி பரந்தாமன் தனது உரையில் வலியுறுத்தினார்.
>
> காந்தி கொலையில் ஆயுள் தண்டனைக்கு உள்ளான கோபால் கோட்சேயை 15 வருடங்களில் விடுதலை செய்யும்போது பேரறிவாளனை 26 வருடங்களுக்குப் பிறகும் விடுதலை செய்ய மறுப்பது என்ன நியாயம்? என்று கேட்டார் நீதிபதி அரி பரந்தாமன்.

இப்போது ஒருவர் நீட் தேர்வு எழுத வேண்டுமானால் அதற்கு பயிற்சி மய்யத்துக்குப் போய் தனிப் பயிற்சி எடுக்க வேண்டும். அதற்கு இலட்சக்கணக்கில் பணம் வாங்குகிறார்கள். ‘பிளஸ் டு’ மதிப்பெண் மதிப்பிழந்து போய் விட்டது. ‘நீட் தேர்வு’ மதிப்பெண்தான் முக்கியம் என்றாகி விட்ட பிறகு சாதாரண ஏழை எளிய குடும்பத்தி லிருந்து கிராமங்களிலிருந்து படிக்க வரும் மாணவர்கள், இப்படி பணம் செலவிட்டு படிக்க முடியுமா?

அரசியல் சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கர் கல்வியை மாநிலங்களின் உரிமைகளாக்கி மாநிலப் பட்டியலில் வைத்தார். 1976இல் இந்த உரிமையை திருடிக் கொண்டு விட்டார்கள். மாநிலப் பட்டியலிலிருந்து ஒத்திசைவுப் பட்டியலுக்கு (பொதுப் பட்டியலுக்கு) மத்திய அரசு மாற்றிக் கொண்டு விட்டது. கல்வி மாநிலப் பட்டியலிலேயே இருந்திருக்குமானால் இப்போது ‘நீட்’டே வந்திருக்காது. 1.2.2017 அன்று தமிழக சட்டமன்றத்தில் நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்குக் கோரி தீர்மானம் நிறைவேற்றினோம். ஆளும் கட்சி, எதிர் கட்சி என்று அனைத்து கட்சி உறுப்பினர்களும் ஒருமித்து நிறைவேற்றிய தீர்மானம் அது. ஏதோ, அரசின் உத்தரவு அல்ல. ஒரு சட்டமன்றம் தீர்மானத்தை நிறைவேற்றுகிறது என்றால் ஏழரை கோடி தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த கருத்து என்று அர்த்தம். அதுவும் தனியார் வியாபாரமாக நடத்தும் மருத்துவக் கல்லூரிகளுக்கு நாம் விதிவிலக்கு கேட்கவில்லை. அரசு ஒதுக்கீட்டின் கீழ் நிரப்பப்படும் இடங்களுக்கு மட்டுமே நாம் நீட் தேர்விலிருந்து விதிவிலக்கு கேட்டோம். அந்த சட்டத்துக்கு இதுவரை மத்திய அரசு ஒப்புதல் தரவில்லை.

அரசுக் கல்லூரியில் மருத்துவம் படிக்கும் ஒரு மாணவருக்கான கட்டணம் ‘எல்.கே.ஜி.’க்கு தனியார் பள்ளிகள் வாங்கும் கட்டணத்தைவிட குறைவு. அரசு மருத்துவக் கல்லூரியில் ஒரு மாணவருக்கான ஆண்டுக் கட்டணம் ரூ.8 ஆயிரம் மட்டும்தான். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 24 அரசு மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. வேறு எந்த மாநிலத்திலும் இந்த எண்ணிக்கையில் கிடையாது. நான் கேட்கிறேன், மோடி குஜராத் மாநிலத்தை 12

(4ஆம் பக்கம்)

## பெண் போராளிகள் – ஒரே மேடையில் ஜாதி ஒழிப்புக்கு போர் முரசு கொட்டுகிறார்கள்

*ஜெயராணி – திவ்ய பாரதி – உடுமலை கவுல்யா – வளர்மதி – சிவகாமி – இரோன் சர்மிளா*

எழுத்துப் பேராளிகள்; களப் போராளிகள்; சுய ஜாதி எதிர்ப்புப் போராளிகள்; இராணுவ ஒடுக்குமுறை எதிர்ப்புப் போராளிகள்

– இவர்கள் அனைவருமே பெண் போராளிகள்.

**“பெண்கள் வருவதன் மூலமும் அவர்கள் வளர்ச்சி பெருகுவதன் மூலமும் தான் நமது கொள்கைகள் வீறிட்டெழ முடியுமே தவிர, “ஆண்களின் வீர உரைகளால் மாத்திரம்” காரியங்கள் சாத்தியமாகி விடாது”.**

– இது 1931இல் ஈரோடு சுயமரியாதை மாநாட்டுக்கு பெரியார் விடுத்த அழைப்பு.

பெரியார் அன்று தந்த அழைப்பை ஏற்று,

இதோ, களம் நோக்கி வருகிறார்கள், பெண்கள்.

ஜாதி ஒழிப்புக் களம் கூர்மை பெறுகிறது; இயக்கங்கள், அமைப்புகள், தோழர்கள் அனைவரும் ஓரணியாய் திரளுவோம்!

பெண்களை கட்டாயம் அழைத்து வாருங்கள்!

**அக். 7 – மாலை 5.00 மணிக்கு**
**சென்னை பெரம்பூர் பாரதி திடல் நோக்கி திரளுவீர்!**

*தபோல்கரிலிருந்து கவுரி இராவணன் வரை...*

## தொடரும் ‘ராமலீலா’க்கள்

ஆண்டுதோறும் விஜயதசமி யன்று புதுடில்லி ராம்லீலா மைதானத்தில் ‘இராவணன்’, ‘மேகநாதன்’, ‘கும்பகர்ணன்’ – என்று இராமாயணத்தில் ‘அசுரர்’களாக சித்தரிக்கப்படும் திராவிடர்களை வடநாட்டுக்காரர்கள் எரித்து ‘ராமலீலா’ கொண்டாடுகிறார்கள். இந்தியாவின் ‘பிரதமர், குடியரசுத் தலைவர்’கள் எல்லாம் இந்த ‘எரிப்பு’ விழாவில் பங்கெடுப்பது வாடிக்கை. பெரியார் மறைவுக்குப் பிறகு திராவிடர் கழகத் தலைவரான அன்னை மணியம்மையார் இதை எதிர்த்து 1974 டிசம்பர் 25இல் இராமன், சீதை, இலட்சுமணன் உருவப் படங்களை எரிக்கும் ‘இராவண லீலா’வை நடத்தினார். 1995இல் பெரியார் திராவிடர் கழகம் உருவான பிறகு 1996, 1997ஆம் ஆண்டுகளில் இதேபோல் இராவண லீலாவை நடத்தியது.

இப்போது உ.பி. மாநிலத்தைச் சார்ந்த ஓம்வீர் சரஸ்வத் என்ற வழக்கறிஞர் ‘இராவணன் உருவ பொம்மைகளை எரிக்கக் கூடாது’ என்று பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியிருப்பதாக ‘தினமணி’ நாளேடு (செப்.27) ஒரு செய்தி வெளியிட்டுள்ளது. அதில், “இராவணனை எரிப்பது அவனை தெய்வமாக வணங்கி வரும் சமூகத்தினரை இழிவுப்படுத்துகிறது. மத்திய பிரதேச மாநிலம் மந்த்சவுர் என்ற ஊரில் இராவணனுக்கு மிகப் பெரிய சிலை நிறுவப்பட்டுள்ளது. டெல்லிக்கு அருகே கிரேட்டர் நொய்டாவில் இராவணனுக்கு கோயில் இருக்கிறது. அத்துடன் தசரா விழாக்களில் பெரும் கூட்டம் திரளுவதால் இராவணன் உருவ பொம்மையை எரிக்கும்போது, தீ விபத்துகள் நிகழ்கின்றன” என்று கூறியுள்ள அந்த வழக்கறிஞர், இராவணன் ‘சரஸ்வத் பிராமண’ சமூகத்தைச் சார்ந்தவர் என்றும் கூறுகிறார். இராவணன் ஒரு ‘பிராமணன்’ என்ற கருத்தை அவ்வப்போது பார்ப்பனர்கள் கூறுவது வழக்கமாகிவிட்டது. புராணக் கதைகளின் பாத்திரங்களுக்கு எந்த ‘வர்ணத்தையும்’ பூசலாம்; காரணம் அவைகள் வரலாறுகள் இல்லை.

இராமன், அரசக் குடும்பத்தில் பிறந்த ‘சத்திரியன்’ என்பதால், வேத முறைப்படி பார்ப்பன இராஜ்யத்தை நடத்தினான். அதனால்தான் – கடவுளை நேரடியாக வணங்கிய சூத்திர சம்பூகன் கழுத்தை ‘பிராமணர்கள்’ முறையிட்டதால் விசாரணை செய்யாமலேயே வெட்டித் தள்ளினான். இராமாயணக் கதையை பரப்பியதன் நோக்கம், வேதங்களை பார்ப்பன ‘தர்மங்களை’ எதிர்த்த ‘அசுரர்’களை கொன்று ஒழித்துவிட வேண்டும்; அதுதான் ‘தர்மம்’ என்ற உண்மையை உணர்த்துவதற்குத் தான்.

அதனால்தான் ‘இராவணனை’ இப்போதும் ‘ராமலீலா’ கொண்டாடி தீயில் போட்டு எரிக்கிறார்கள். பார்ப்பனிய எதிர்ப்பாளர்களை அழித்து விட வேண்டும் என்ற ‘ராமலீலா’ காட்டும் வழியில்தான் தபோல்கர், பன்சாரே, கல்புர்கி, கவுரி ‘இராவணன்’ ஆகியோர் துப்பாக்கிக் குண்டுக்கு பலியாக்கப்படுகிறார்கள். ‘தேவர்’களின் சமூக விரோத நாசகாரச் செயல்களை எதிர்த்த ‘அசுரர்’கள் அழிக்கப்பட்டார்கள். அந்த ‘தேவ–அசுர’ப் போராட்டம் இப்போது தொடர்கிறது என்பதைத் தானே இந்தப் படுகொலைகள் உணர்த்துகின்றன?

# கோவை, திருப்பூரில் கொடியேற்று விழா, தெருமுனை, பொதுக் கூட்டங்கள்

*கோவை, திருப்பூர் மாவட்டங்களில் படத்திறப்பு–கொடியேற்று விழா, தெருமுனைக் கூட்டங்கள் – பொதுக் கூட்டங்கள் நடைபெற்றது.*

இழந்த உரிமைகளை மீட்போம், தமிழகத்தின் தனித்தன்மை காப்போம் என்ற திருச்செங்கோடு மாநாட்டுத் தீர்மானத்தின் அடிப்படையில் செப்-16, சனி காலை 10 மணி அளவில் திருப்பூர் மாவட்டம் உடுமலையில் தொடங்கி கோவை மாவட்டம் பொள்ளாச்சி வழியாக கோவை வரை இரண்டு நாள் பரப்புரை பயணம் எழுச்சியோடு நடைபெற்றது.

செப்-16 காலை 10 மணிக்கு திருப்பூர் மாவட்டம் காரைத் தெழுவில் தொடங்கி கடத்தூர், கடத்தூர்புத்தூர், கணியூர் ஆகிய இடங்களில் கொடியேற்று விழா நடைபெற்றது. கணியூரில் நடைபெற்ற பிரச்சாரத்தில் தோழர்கள் கோவை கிருஷ்ணன், சங்கீதா, யாழ் மொழி, யாழ் இசை ஆகியோர் பகுத்தறிவு பாடல்கள் பாடினர். தொடர்ந்து, தோழர் முகில் ராசு உரையாற்றினார். இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார்.

மடத்துக்குளம் பகுதியில் சோழன் மாதேவி, மடத்துக்குளம் பெரியவட்டாரம் ஆகிய இடங்களில் கொடியேற்று விழா நடைபெற்றது. இரா.மோகன் மற்றும் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். மடத்துக்குளம் பேருந்து நிலையம் அருகில் கொடியேற்றி யாழ் இசை, யாழ் மொழி, இசை மதி, சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்ற பொருப்பாளர்) மற்றும் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர்.

மதியம் உடுமலை குட்டை திடல், உடுமலை பேருந்து நிலையம் பகுதிகளில் பெரியார் படத்திறப்பு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தோழர்கள் யாழ் மொழி, யாழ் இசை, கிருஷ்ணன், இசை மதி ஆகியோர் பகுத்தறிவு பாடல்கள் பாடினர். பொள்ளாச்சி வெள்ளிங்கிரி, தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து மலையாண்டிபட்டணம் கிராமத்தில்



மடத்துக்குளம்

பெரியார் பேசிய இடத்தில் பெரியார் படத்தை தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்து, உரையாற்றினார். அருட்செல்வனின் தந்தை அருணாச்சலம் கருப்பு சிவப்பு நெசவு நூலில் மாலை தயாரித்து பெரியார் படத்திற்கு அணிவித்தார், அனைத்து தோழர்களுக்கும் மடத்துக்குளம் மோகன், உடுமலை இயல், மற்றும் அருட்செல்வன் ஆகியோர் மாட்டுகறி பிரியாணி வழங்கினர். இந்த பிரச்சார பயணத்தில் பொருளாளர் திருப்பூர் துரை சாமி, சூலூர் பன்னீர் செல்வம், முகில் ராசு, சிவகாமி, கோமதி, இசை மதி, சங்கீதா, திருப்பூர் சாரதி சக்தி, வைத்தீஸ்வரி, கோவை கிருஷ்ணன், நிர்மல், ஈரோடு சுகுணா, பல்லடம் தேன்மொழி, சரஸ்வதி, மடத்துகுளம் ஜோதி மற்றும் கடத்தூர் அய்யப்பன், சரவணன், கண்ணன், கணியூர் திலீபன், சோழமாதேவி திராவிட ஜின்னா, மடத்துகுளம் பால் பாண்டியன், மற்றும் ஆனைமலை பொள்ளாச்சி தோழர்கள் கலந்து கொண்டனர், மற்றும் விடுதலை சிறுத்தைகள், ஆதித்தமிழர் பேரவை, மக்கள் விடுதலை முன்னணி

பொள்ளாச்சி




அமைப்புகளின் தோழர்களும் பங்கேற்றனர். செப்-16 மாலை 7 மணிக்கு பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கடும் மழைக்கு நடுவே தொடங்கிய கூட்டத்தில் பல்லடம் நறுந்தேன் குழுவினரின் பறை இசையைத் தொடர்ந்து ஆனைமலை வினோதினி தலைமையில் மணி மொழி தொடக்க உரையாற்றினார். சபரிகிரி அனைவரையும் வரவேற்றார். தொடர்ந்து தென்னை தொழிலாளர் பேரவை கருப்புசாமி, மக்கள் விடுதலை முன்ணனி கா.மாரிமுத்து, தமிழ் தேசிய விடுதலை இயக்கம் வே.பாரதி, கா.சு.நாகராசன், வே.வெள்ளிங்கிரி ஆகியோர் உரைக்கு பின் இறுதியில் தலைவர் கொளத்தூர் மணி



திருப்பூர்

சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் ஆனைமலை அரிதாசு, அப்பாதுரை, ஆனந்த், கணேஷ், மணி, பொள்ளாச்சி இராசேந்திரன், மணி, சீனிவாசன் மற்றும் ஆனைமலை பொள்ளாச்சி காளியப்பன் கவுண்டன்புதூர் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். விவேக் சமரன் நன்றி கூற முதல் நாள் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

செப்-17 காலை 10 மணிக்கு இரண்டாம் நாள் நிகழ்ச்சி தொடங்கியது. கொட்டும் மழையில் பொள்ளாச்சி பேருந்து நிலையம் முன்பு தந்தை பெரியார் படத்தை, தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்து உரையாற்றினார். இதில் திராவிடர் கழகம் பொறியாளர் பரமசிவம், பெரியார் தி.க. (சுயமரியாதை சமதர்ம இயக்கம்) கா.சு. நாகராசன், வே.வெள்ளிங்கிரி, திராவிடர் விடுதலை கழகத் தோழர்கள், தென்னை தொழிலாளர் கருப்புசாமி, தி.மு.க. நகர செயலாளர் தென்றல் செல்வராஜ். மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பகல் 11 மணிக்கு தென்சங்கம்பாளையம், சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்து உரையாற்றினார். 12 மணிக்கு ஆனைமலை முக்கோணம் பகுதியில் தலைவர் கொளத்தூர் மணி கொடியேற்றி உரையாற்றினார். தொடர்ந்து 12.30 மணிக்கு கா.க.புதூர் கிராமத்தில் பெரியார் படதிறப்பு விழா நடைபெற்றது. தென்னை தொழிலாளர் கருப்பு சாமி, தமிழ்நாடு மாணவர் மன்றம் தினேஷ், சபரிகிரி, பிரபு, வினோதினி, மாணிக்க சேதுபதி, கார்த்திக், வே.வெள்ளிங்கிரி, இரா.மோகன், கா.சு.நாகராசன், இசைமதி ஆகியோர் உரைக்கு பின், இறுதியில் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். வழக்குரைஞர் வெ.பிரபாகரன் நன்றிகூறினார். இந் நிகழ்வில் திராவிடர் விடுதலை கழக தோழர்கள் அரிதாசு, அப்பா துரை, ஆனந்த், சிவா, கணேஷ் குமார், பொள்ளாச்சி ஆனைமலை தோழர்கள் பெரியார் தி.க. தோழர்கள். மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர். கா.க.புதூர் தோழர்கள் சார்பாக மாட்டுகறி பிரியாணி வழங்கப்பட்டது.

பயணத்தின் இறுதியில் கோவையில் 17-09-2017 மாலை 6 மணிக்கு மாவட்ட தலைவர் நேருதாஸ் தலைமையில் தொடங்கிய கூட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் ஜெயந்த் வரவேற்புரை நிகழ்த்த தோழர்கள் மருத்துவர் அனிதா மதவாதத்தால் படுகொலை செய்யப்பட்ட கவுரி லங்கேஷ் ஆகியோர் படத்திறப்பும் நினைவேந்தல் நிகழ்ச்சியும் நடைபெற்றது. தோழர்கள் கருத்துரை நிகழ்த்தினர். மாவட்ட செயலாளர் கே.எஸ்.கனகராஜ், தமிழ்நாடு அறிவியல் மன்றம் ஆசிரியர் சிவகாமி, பி.யூ.சி.எல். வழக் குரைஞர் ச.பாலமுருகன் ஆகியோரது உரைக்குபின், கல்வியாளர் பிரின்ஸ் கஜேந்திர பாபு, கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். தொடர் மழையிலும் புதியவர்கள் அதிக அளவில் கலந்து கொண்டனர்.

## அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜையா? ஈரோட்டில் கழகம் ஆர்ப்பாட்டம்




*அரசு அலுவலகங்களில் சட்ட விரோதமாக ஆயுத பூஜை கொண்டாடுவதைக் கண்டித்து ஈரோடு தெற்கு மாவட்ட தி.வி.க. கண்டன ஆர்ப்பாட்டம் 26.09.2017 புதன் மாலை 5 மணியளவில் ஈரோடு வீரப்பன்சத்திரத்தில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்த காவல்துறை, தோழர்களை கைது செய்து சத்திரம் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டத்தில் 15 தோழர்கள் கலந்துகொண்டனர்.*

*கைதான தோழர்கள் : ரத்தினசாமி (அமைப்புச் செயலாளர்), சண்முகப்பிரியன் (மாவட்ட செயலாளர்), குமார் (மாவட்ட அமைப்பாளர்), திருமுருகன் (மாநகரத் தலைவர்), சத்தியராஜ் சித்தோடு, கிருஷ்ணன் ரங்கம்பாளையம், எழிலன் சித்தோடு.*

# பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை (3)

# ‘பார்ப்பன’ வாதங்களை முறியடித்தார், புத்தர்

*புத்தர் விழா கொண்டாடி, அதில் விநாயகன் சிலைகளை பெரியார் உடைக்கச் சொன்னார் என்ற வரலாற்றை விடுதலை இராசேந்திரன், கைத்தடி கண்டன ஊர்வலத்தில் கைதான கழகத்தினரிடம் சுட்டிக் காட்டினார். (14.9.2017 இதழ் தொடர்ச்சி)*

“கடவுள் உண்டா இல்லையா என்பது பற்றி புத்தர் கவலைப்படாதவராக அது பயனற்ற வாதம் என்ற கருத்துடையவராக இருந்தாலும் அனைத்தையும் உருவாக்கி ஆட்டிப் படைக்கும் சக்தி ஒன்று உண்டு என்ற நம்பிக்கை புத்தரிடம் இருந்திருக்குமானால், அவர் போதித்த கருத்துகள் எல்லாம் தலைகீழாக வேறு திசையில் சென்றிருக்கும்” என்கிறார், தலைசிறந்த இந்திய தத்துவ ஆய்வாளர் தேவி பிரசாத் சட்டோ பாத்யாயா.

“அப்படி ஒரு ‘சக்தி’ இருக்கிறது என்ற நம்பிக்கையிலிருந்துதான் அந்தக் கடவுளை மகிழ்வித்தால் கருணை காட்டுவார் என்ற நம்பிக்கை உருவாகிறது; அந்த நம்பிக்கையில்தான் கடவுளை வேண்டுதல்; காணிக்கை செலுத்துதல்; பலியிடுதல் என்ற சடங்குகள் வந்தன. இறைவனை இவற்றின் வழியாக மகிழ்வித்து கருணையைப் பெற முடியும் என்ற நம்பிக்கை, புத்தர் காலத்திலும் இருந்தது. இவற்றில் நம்பிக்கை இல்லாத காரணத்தினால் தான் புத்தர் இந்த நம்பிக்கைகளை முற்றாக ஒதுக்கிவிட்டு மனிதனின் துயரத்துக்கு என்ன காரணம் என்பது குறித்து சிந்தித்தார். இல்லாவிட்டால் துயரத்துக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம் கடவுள் என்று கூறி கடவுளை அடையும் வழிமுறைகளைத்தான் புத்தரும் பேசியிருப்பார். ஆனால் புத்தர் அப்படி சிந்திக்காமல் துயரத்துக்குக் காரணங்களைக் கண்டறியவே முற்பட்டார்” என்கிறார் சட்டோ பாத்யாயா. புத்தர் வாழ்ந்த காலத்தில் அவரது கருத்துகள் எதுவும் பதிவாகவில்லை. புத்தர் காலத்துக்குப் பிறகு அஸ்வகோசர் தனது நினைவிலிருந்து புத்தர் கருத்துகளை ‘புத்த சரிதத்தில்’ பதிவு செய்தார். புத்தரின் கருத்துகளாக அஸ்வகோசர் முன் வைத்திருக்கும் தத்துவங்கள் - புத்தர் ஒரு முழுமையான நாத்திகர் என்பதையே உறுதிப்படுத்துகின்றன.

இவ்வுலகம் கடவுளால் படைக்கப்பட்டது என்றால், தூய்மை; தூய்மையற்ற எல்லா பொருள்களும் அவனிடமிருந்தே வந்திருக்க வேண்டும். அப்படியானால், கடவுளால் அனுப்பி வைக்கப்பட்ட அனைத்திலும் மாற்றமோ, அழிவோ நடந்திருக்கக் கூடாது. துன்பம், இயற்கைப் பேரிடர் ஏதும் நிகழ்ந்திருக்கக் கூடாது. சரி; தவறு என்று எதுவும் இருக்க முடியாது.........

ஒரு உயிருக்கு இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு அனைத்தும் இறைவனின் கொடை என்றால், இறைவனுக்கும் அந்த உணர்வுகள் இருந்திருக்கத்தான் வேண்டும். அப்படியானால் அவனை குணங்களற்றவன் என்று எப்படி கூற முடியும்?

கடவுள் மனிதனைப் படைத்தார்; எனவே கடவுள் ஆணையை ஏற்பதைத் தவிர, உயிர்களுக்கு வேறு வழியில்லை என்றால், ஒரு மனிதனுக்கு நல்ல குணங்களே வேண்டும். அவை மட்டுமே உயர்வானது என்று ஏன் சிறப்பிக்க வேண்டும்? அனைத்தும் அவன் செயல் என்றால் நல்லது, கெட்டது என்பதற்கெல்லாம் இடம் ஏது? இந்த குணங்கள் அனைத்தும் கடவுளுக்கும் உரியதாக ஆகிவிடுமல்லவா?

துன்ப, துயரங்களுக்கு எல்லாம் கடவுள் காரணமில்லை என்று கூறினால், அதற்குக் காரணம் யார்? அதற்கெல்லாம் கடவுளைத் தவிர்த்து வேறு காரணங்கள் உண்டு என்றால், கடவுளைத் தவிர்த்து, அவன் சக்திக்கு உட்படாதவைகள் உண்டு என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். கடவுளுக்கே தொடர்பில்லாதவைக்கு கடவுள் காரணம் இல்லை என்பதையும் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

உலகைப் படைத்தவர் கடவுள் என்றால், அவர் படைத்ததற்கு ஒரு நோக்கம் இருந்தாக வேண்டும். அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறும்போது கடவுளுக்கு ஒரு மனநிறைவு கிடைக்கும். முழுமையான நோக்கம் நிறைவேறாதபோது கடவுள், ‘பூரணத்துவம்’ பெற்றவர் என்று எப்படி கூற முடியும்? சரி; நோக்கம் ஏதுமின்றியே கடவுள் உலகைப் படைத்தார் என்றால், அந்தக் கடவுள் பைத்தியக்காரனாகவோ அல்லது பால் உறிஞ்சும் பச்சைக் குழந்தையாகவோ தான் இருக்க முடியும்.

அப்படியே படைத்திருந்தாலும் அது ஒரே கடவுளாகத்தானே இருக்க முடியும்? ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்கள் எப்படி வந்தன?”

- என்று கடவுள் இருப்பையே கேள்விக்குள்ளாக்கியிருக்கிறார் புத்தர்.

‘வர்ணாஸ்ரமத்தை’யும் பிறப்பின் அடிப்படையில் ‘பிராமணன்’ உயர்ந்தவன் என்பதையும் புத்தர் ஏற்க மறுத்தார். அவருடைய சங்கத்தில் துப்புரவு தொழிலாளி, சவரத் தொழிலாளிகள், உயர் பொறுப்பில் இருந்ததை ஏற்கனவே கூறினேன்.

அனாதபிண்டிகர் என்பவர் ஆசிரமத்தில் புத்தர் தங்கியிருந்தபோது ஆசுவலாயனன் என்ற பார்ப்பன இளைஞன், புத்தருடன் வாதம் செய்கிறான். அந்த விவாதம் மிகவும் சுவையானது:

“**ஆசுவலாயனன் :** கவுதமரே! பிராமண வருணமே உயர்ந்தது. மற்ற வருணங்கள் தாழ்ந்தவை. பிராமண வருணம் வெண்மையானது. மற்றவை கருப்பானவை. பிராமணர்களுக்கே முக்தி கிடைக்கிறது. மற்றவர்களுக்கு அல்ல. பிராமணர்கள் பிரம்மதேவனுடைய முகத்திலிருந்து உண்டானவர்கள். அவர்கள் அவனுடைய சொந்தப் பிள்ளைகள். எனவே, அவர்கள்தாம் அவனுடைய செல்வத்துக்கு உரிமையானவர்கள் என்று அந்தணர்கள் கூறுகிறார்களே, இதைப் பற்றி உங்கள் கருத்து யாது?

**புத்தர் :** ஆசுவலாயனா! அந்தணர்களின் மனைவியர் பூப்படைகிறார்கள், கருத்தரிக்கிறார்கள், மகவை ஈனுகிறார்கள், குழந்தைகளுக்குப் பாலூட்டுகிறார்கள். இப்படியாக அந்தணரின் சந்ததியர் பிற வருணத்தவரைப் போலவே தாய் வயிற்றிலிருந்து பிறந்திருக்க, பிரம்மதேவனுடைய முகத்திலிருந்து தோன்றியதாகக் கூறிக் கொள்வது வியப்பாக இல்லையா?

**ஆசுவலாயனன் :** கவுதமரே! தாங்கள் எப்படி வேண்டுமானாலும் சொல்லுங்கள். ஆனால், அந்தணர்கள் தாங்கள் பிரம்ம தேவனுடைய செல்வத்துக்கு உரியவர்கள் என்பதில் முழு நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

**புத்தர்:** ஆசுவலாயனா! யவனம், காம்போஜம் முதலிய எல்லை நாடுகளில் ஆரியர், தாசர் என்ற இரண்டே வருணங்கள் உண்டு. சில சமயம் ஆரியன் தாசனாவான், தாசன் ஆரியனாவான். இதை நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?

**ஆசுவலாயனன்:**ஆம், கவுதமரே! கேள்விப் பட்டிருக்கிறேன்.

**புத்தர் :** அப்படியிருக்கையில், பிரம்மதேவன் அந்தணர்களை முகத்திலிருந்து உண்டாக்கினான், அவர்கள் உயர்ந்தவர்கள் என்பதற்கு ஆதாரம் என்ன?”

**அக்கினியில் வேறுபாடு உண்டோ?**

தங்களுக்குத் தாங்களே எழுதிக்கொண்டரிக் வேதத்தின் புருஷ சூக்தத்தை ஆதாரமாகக் கொண்டே பிராமணர்கள் பிரம்மனின் முகத்திலிருந்து உதித்தவர்கள் எனும் நம்பிக்கை கட்டமைக்கப்பட்டது. இதற்கு எதிராக வாழ்வின் யதார்த்தங்களை ஆதாரமாக வைத்தார் புத்தர். பிராமணர்கள் மிக உயர்ந்தவர்கள் என்றால் அந்த நம்பிக்கை இந்த தேசத்தில் மட்டும் நிலவுவது ஏன்? பக்கத்து நாடுகளில் அது இல்லாதது ஏன்? இதிலிருந்தே பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிப்பது முறையற்றது என்பது தெளிவாகிறது என்பதே புத்தரின் வாதம். அப்படியும் இதை ஏற்கவில்லை. ஆசுவலாயனன் அவன் சொன்னதையே சொன்னான்.

**ஆசுவலாயனன் :** கவுதமரே! தாங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். அந்தணர்கள் தங்களை உயர்வாகவும் மற்ற வருணத்தவரைத் தாழ்வாகவும் கருதுகிறார்கள் என்பது உண்மை.

**புத்தர் :** ஆசுவலாயனா! அரசன் ஒருவன் அந்தணர்களையும் க்ஷத்திரியர்களையும் பார்த்து ‘சால மரம் அல்லது சந்தன மரம் போன்ற உயர்ந்த மரங்களைக் கடைக் கோலாகக் கொண்டு தீயை உண்டாக்குங்கள்’ என்றார். புலையர், வேடர் உள்ளிட்டவர்களைப் பார்த்து, ‘நாய்க்கும் பன்றிக்கும் தீனி வைக்கும் பாண்டத்திலும், சாயம் தோய்க்கும் பாண்டத்திலும் ஆமணக்கைத் தீக்கடைக் கோலாகக் கொண்டு தீயை உண்டாக்குங்கள்’ என்றார். ஆசுவலாயனா! அப்போது அந்தணர் முதலியோர் உண்டாக்கிய அக்கினி மட்டுமே ஒளிரும், புலையர் முதலியோர் உண்டாக்கிய அக்கினி ஒளிராது என்று உனக்குத் தோன்றுகிறதா?

**ஆசுவலாயனன் :** கவுதமரே! அக்கினி ஒரே மாதிரிதான் ஒளிரும். எங்கும் ஒரே மாதிரியாகவே அக்கினி காரியம் நடக்கும்.”

புத்தர் மகத்தான தத்துவஞானி மட்டுமல்ல, ஓர் அருமையான இலக்கியவாதியும்கூட. எளிமையான, அழகான, கச்சிதமான உவமைகளைப் பயன்படுத்தியிருக்கிறார் பல இடங்களில். ஒரு மாபெரும் மக்கள் தலைவராக இவர் பரிணமித்ததற்கு அவருக்குள்ளிருந்த கவித்துவ ஆற்றலும் ஒரு முக்கிய காரணமாகும்.

எந்தக் கடைக்கோலில் உருவாக்கப்பட்டிருந்தாலும் தீ, தீதான். எத்தகைய மனிதர்களுக்குப் பிறந்தாலும், மனிதன், மனிதன்தான். அதில் வேறுபாடு இருக்க முடியாது. பிறப்பின் அடிப்படையில் பாகுபாடு காட்டக் கூடாது. இதை இன்னும் பட்டவர்த்தனமாகச் சொன்னார் புத்தர்.

“**புத்தர் :** ஒரு க்ஷத்திரியப் பிள்ளை பிராமணப் பெண்ணை மணந்து கொண்டால், அந்தத் தொடர்பினால் அவனுக்குப் பிறக்கும் மகன் தாய் தந்தையைப் போலவே மனிதனாக இருப்பானா இல்லையா? அந்தணப் பிள்ளை ஒருவன் க்ஷத்திரியப் பெண்ணை மணந்தால், அந்தத் தொடர்பினால் பிறக்கும் மகன், தாய் தந்தையரைப் போலவே மனிதனாக இருப்பானா இல்லையா?

**ஆசுவலாயனன் :** இத்தகையக் கலப்பு மணத்தினால் பிறக்கும் மகன் தாய் தந்தையரைப்போல மனிதனாகவே இருப்பான். கவுதமரே! அவனை அந்தணன் என்றும் சொல்லலாம், க்ஷத்திரியன் என்றும் சொல்லலாம்.

**புத்தர்:** ஆனால் ஆசுவலாயனா! ஒரு பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் தொடர்பு ஏற்பட்டு ஒரு குட்டி பிறந்தால் அது தாயைப்போல இருக்குமா? தகப்பனைப் போல் இருக்குமா? அதைக் குதிரை என்று சொல்ல முடியுமா? கழுதை என்று சொல்ல முடியுமா?

**ஆசுவலாயனன் :** கவுதமரே! அதைக் குதிரை என்றோ, கழுதை என்றோ சொல்ல முடியாது. அது மூன்றாவது இனம் ஒன்றைச் சேர்ந்த பிராணி. அதைக் கோவேறுக் கழுதை என்கிறோம். ஆனால், அந்தணருக்கும் க்ஷத்திரியருக்கும் உண்டான கலப்பினால் பிறந்த குழந்தையிடம் இத்தகைய மாறுதல் இருப்பதில்லை.”

வருண வேறுபாடு செயற்கையானது. அது இருவகை உயிரினங்களுக்கும் இடையிலான இயற்கையான வேறுபாடு அல்ல. அதனால் தான் வருணக் கலப்பால் பிறக்கும் பிள்ளை மனிதனாக இருக்கிறது. யதார்த்த உண்மை இப்படியிருக்கும்போது வருணத்தின் பேரில் உயர்வு தாழ்வு கற்பிக்க முடியாது என்று ஆணித்தரமாக வாதிட்டார் புத்தர். இன்றைக்குக்கூட இப்படி வாதாடப் பலரும் தயங்குவார்கள். அந்த ஞானியோ 2500 ஆண்டுகளுக்கு முன்பே இப்படி அஞ்சாமல் வாதாடினார்.

ஆக, பெரியாருக்கு முன் பார்ப்பனியத்தை எதிர்த்த புரட்சியாளர் புத்தர். ஆனாலும் அவரது புரட்சியை பார்ப்பனியம் ஊடுருவலால் வீழ்த்தியது. பெரியாரின் பார்ப்பனிய எதிர்ப்புப் புரட்சி அத்தகைய ஊடுருவலைத் தடுத்தது. பவுத்தத்தை - பார்ப்பனியம் எவ்வாறு வீழ்த்தியது என்ற சுருக்கமான வரலாற்றை மட்டும் விளக்கி எனது உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன். (தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நீட் தேர்வை விலக்கி ‘அனிதா சட்டம்’ இயற்றுவோம்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வருடம் ஆட்சி செய்தாரே; ஒரே ஒரு மருத்துவக் கல்லூரியை அவரது மாநிலத்தில் அவரால் உருவாக்க முடிந்ததா? இந்த பெரியார் மண்ணில் தான் 24 அரசு மருத்துவக் கல்லூரிகள். (கைதட்டல்)

இங்கே நாடகத்தில் அனிதா பெற்றது 1176 மதிப்பெண் என்று கூறினார்கள். அதைக்கூட அப்படிக் கூறக் கூடாது. தமிழ், ஆங்கில மொழிப் பாடங்களில் பெறும் மதிப் பெண்களை விட்டு விட்டுப்பார்க்க வேண்டும். அனிதா கணிதத்தில் பெற்ற மதிப்பெண் 200க்கு 200; பவுதீகத்தில் பெற்றது 200-க்கு 200; வேதியலில் பெற்றது 200க்கு 198; உயிரியலில் பெற்றது 200க்கு 194. எத்தகைய சாதனையைப் படைத்திருக்கிறார் என்பதை நினைத்துப் பாருங்கள்.

நீட் வேண்டாம் என்று நாம் தமிழ் நாட்டில் போராடினோம். அமைதி வழியில் ஜனநாயக முறையில்தான் போராட்டங்கள் நடந்தன. எங்கே யாவது ஒரு சிறு வன்முறை நடந்ததாகக் கூற முடியுமா? ஒன்றரை ஆண்டுகாலமாக நடந்தப் போராட்டத்தில் எங்கேயாவது கலவரங்கள் உண்டா?

இப்போது ஒரு முக்கிய செய்தியை உங்களிடம் கூற வேண்டும் என்பதற்காகவே நான் இந்தக் கூட்டத்துக்கு வந்தேன். நீங்கள் இதை கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும். திடீரென்று மணி என்பவர் சட்டம் ஒழுங்கு சீர்குலைவதற்கானப் போராட்டங்களை அனுமதிக்கக் கூடாது என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந் தார். சில கட்சிகள் ‘நீட்’டை வைத்து அரசியல் ஆதாயம் தேடப் பார்க் கிறார்கள் என்றார். நீட் தேர்வை ஆதரிக்கும் பா.ஜ.க.வும் அதற்கு உடந்தையாக இருக்கும் தமிழக அரசும் தங்களின் அரசியல் ஆதாயத்துக்குத் தானே இந்த வழக்கையே போட்டிருக் கிறார்கள்? இதில் அரசியல் ஆதாயம் தேடுவது யார் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒடுக்கப்பட்ட மாணவர்களின் கல்வி, சமுதாய நலன் கருதித்தான் நாம் ‘நீட்’ வேண்டாம் என்று கூறுகிறோம். இதை எதிர்த்துப்போராடுவது நமது கருத்துரிமை. அரசியல் சட்டம் அடிப்படை உரிமையாக வழங்கியிருக்கும் கருத்துரிமையை நீதி மன்றங்கள்கூட பறித்துவிட முடியாது. நாம் வன்முறை துளியும் இன்றி போராட்டங்களை நடத்தும்போது உச்சநீதிமன்றம் வன்முறை இல்லாமல் போராட்டங்களை நடத்த வேண்டும் என்றும், சட்டம் ஒழுங்கு பாதிக்கப் படுமேயானால் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறது. இது தான் நமக்கு மிகுந்த வியப்பைத் தருகிறது. உச்சநீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பு வந்ததற்குப் பிறகுதான், தமிழக அரசு போராடுகிறவர்களை கைது செய்யத் தொடங்கிவிட்டது. இந்தத் தீர்ப்பு பல சந்தேகங்களை எழுப்பு கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட வேண்டும்.

சட்டம் ஒழுங்கு பிரச்சினையை காரணம் காட்டி, கருத்துரிமையைப் பறித்துவிட முடியுமா என்று கேட் கிறேன். சட்டம் ஒழுங்கு பாதிக்கப் படும் என்பதற்காக கருத்துரிமையைப் பறிக்கக் கூடாது என்று ஏற்கனவே உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருப்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

‘இந்து’ பத்திரிகை குழுமம் சார்பாக ‘ஒரே ஒரு கிராமத்திலே’ என்ற திரைப்படம் தயாரிக்கப்பட்டது. இடஒதுக்கீடு கொள்கைக்கு எதிராக தயாரிக்கப்பட்ட படம். அந்தப் படத்தை தமிழகத்தில் திரையிட்டால் சட்டம் ஒழுங்கு பாதிக்கும் என்று கூறி சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்தது. உச்சநீதிமன்றம் போனார்கள். ஏ.பி.ஷா தலைமை நீதிபதியாக இருநதார். அப்போது சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைக் காட்டி கருத்துரிமையைப் பறிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் கூறி, படத்தின் தடையை நீக்கியது. சட்டம் ஒழுங்கு சீர்குலையு மானால் அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது அரசின் கடமை. ‘சட்டம் ஒழுங்கைக் கட்டுப்படுத்து; கருத்துரிமையைத் தூக்கிப் பிடி’ என்பதே தீர்ப்பின் மய்யமான கருத்து.

பொது ஒழுங்கையும் சட்டம் ஒழுங்கையும் சேர்த்து குழப்பு கிறார்கள். இரண்டும் வெவ்வேறானது. பொது ஒழுங்கு என்றால் என்ன? அரியானாவில் குர்மித் ராம் ரஹிம் என்ற மதத் தலைவர், பாலியல் குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டபோது கலவரம் வெடித்து 37 பேர் இறந்தார்கள். தீர்ப்பு கூற வேண்டிய நீதிபதியே நீதிமன்றத்துக்கு ஹெலி காப்டரில் போக வேண்டியிருந்தது. அதுதான் பொது ஒழுங்கு சீர்குலைவு.

உச்சநீதிமன்றத்துக்கு அருகிலேயே இருப்பது பாட்டியாலா வளாகம். ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் கண்ணையா குமார் மற்றும் அவரது தோழர்கள், அம்பேத்கர், மார்க்ஸ் கொள்கைகளைப் பேசினார்கள். அவர்கள் மீது தேச துரோகச் சட்டம் பாய்ந்தது. பெரியார்-அம்பேத்கர்-மார்க்ஸ் சிந்தனைகளையும் சேர்த்துப் படிப்பதுதான் உண்மையான கல்வி அறிவு. அவர்கள் சிவப்பும் நீலமும் வேண்டும் என்று சொன்னாலும், நான் கருப்பு-சிவப்பு-நீலம் என்ற மூன்றுக்கும் அவர்கள் பேசுவதாகவே கருதுகிறேன். பாட்டியாலா நீதிமன்றத்துக்கு அவர்கள் கொண்டு வரப்பட்டபோது ஏராளமான மாணவர்களும் பேராசிரியர்களும் அவர்களுக்கு ஆதரவாக வந்தார்கள். நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே விசுவ இந்து பரிஷத்தினர் அவர்களை தாக்கினர். உச்சநீதிமன்ற வழக்கறிஞர் ராஜீவ் தவான் தலைமையில் ஒரு குழுவாகவே சென்று நீதிபதிகளை சந்தித்து நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே பாதுகாப்பு இல்லை என்று முறை யிட்டனர். இதுதான் பொது ஒழுங்கு சீர்குலைவு.

2002ஆம் ஆண்டு குஜராத்தில் மோடி முதல்வராக இருந்தபோது கரசேவைக்குப் போனவர்கள் வந்த இரயில் பெட்டியில் தீப்பற்றி மடிந்தார்கள். அப்படி இறந்த 26 பேர் பிணங்களை வைத்து குஜராத்தில் ஊர்வலம் நடத்த அனுமதித்தார்கள். கலவரத்தில் 2000த்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர் கொல்லப்பட்டனர். அதுதான் பொது ஒழுங்கு சீர்குலைவு.

**‘ஒரே ஒரு கிராமத்தில்’ படம் தொடர்பான வழக்கில் சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி, கருத்துரிமையைப் பறிக்கக் கூடாது என்று கூறிய உச்சநீதி மன்றம், ‘நீட்’டை எதிர்க்கும் போராட்டத்தில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு உத்தரவு போடுவது ஏன்? ஏன் இந்த இரட்டை அணுகுமுறை? இது தான் நான் எழுப்ப விரும்பும் கேள்வி.**

சி.பி.அய்., வருமானவரித் துறை மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய அரசை எதிர்த்தால் அவர்களை அச்சுறுத்துவதற்கும் ஒடுக்குவதற்கும் இந்த அமைப்புகளைப் பயன்படுத்து கிறார்கள்.

நீட் தேர்வுக்கு விதிவிலக்குக் கேட்டு 1.2.2017இல் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாவுக்கு 9 மாதங்களாகியும் ஒப்புதல் கிடைக்க வில்லை. அதற்கு முன்பு 23.1.2017 அன்று நிறைவேற்றப்பட்ட ‘ஜல்லிகட்டு’ மசோதாவுக்கு ஒப்புதல் கிடைத்து விட்டது. ஏன் இந்த பாரபட்சம்?

கல்வி உரிமையை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவது மட்டுமே இதற்கான தீர்வு. கல்வி உரிமை மாநிலப் பட்டியலில் இருந் திருக்குமானால், நாம் அனிதாவை இழந்திருக்க மாட்டோம். அனிதாவின் மரணத்துக்கான நீதி - நீட் தேர்வை தமிழ்நாட்டிலிருந்து விரட்டி அடிப்பதுதான். தமிழ்நாட்டுக்கு நீட் தேர்வை விலக்கி வைக்கும் சட்டத்தை நிறை வேற்றி அதற்கு ‘அனிதா சட்டம்’ என்று பெயர் சூட்டுவோம். (கைதட்டல்) இதுவே பெரியார் பிறந்த நாள் விழாவில் நாம் எடுக்கும் உறதி. இந்தப் போராட்டத்தில் நாம் உறுதியாக வெற்றி பெறு வோம்” என்றார் முன்னாள் நீதிபதி அரி பரந்தாமன்.

# ஈரோடு வடக்கு மாவட்டத்தில் பெரியார் பிறந்தநாள் எழுச்சி

தந்தை பெரியார் 139-வது பிறந்த நாளையொட்டி ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பாக 17.09.2017 ஞாயிறு காலை 9.00 மணிக்கு பெரியார் திடலில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு தமிழ்நாடு அறிவியல் மன்ற தோழர் மணிமொழி மாலை அணிவித் தார். தோழர்கள் அனைவரும் பெரியாரியியல் உறுதிமொழியை ஏற்றனர். பெரியார் படம் அலங்கரிங்கப்பட்ட வண்டி முன்செல்ல இரு சக்கர வாகனத்தில் அனைவரும் காசி பாளையம் சென்றனர். அங்கு கழகக் கொடி கம்பத்தில் பெரியார் பிஞ்சு யாழ் பிரபாகரன் கொடியேற்றியபின் பொதுமக்கள் அனை வருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. அடுத்து அக்கரைக்கொடிவேரி பகுதியில் செல்வி மா.ஈஸ்வரி கழக கொடியினை ஏற்றினார்.

சத்தியமங்கலத்தில் அனைத்து அமைப்பினர் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட பெரியார் பிறந்தநாள் விழா ஊர்வலத்தில் தோழர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தை வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் மற்றும் சமூக ஆர்வலர் கருப்புசாமி துவக்கி வைத்தனர். ஊர்வலம் சத்தி பேருந்து நிலையம் வந்தடைந்து அங்கு அலங்காரம் செய்யப்பட்டு இருந்த பெரியார் படத்திற்கு தலித் விடுதலைக் கட்சி நிறுவனர் மருத்துவர் செங்கோட்டையன் மற்றும் ஆதித் தமிழர் விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் கோவை இரவிக்குமார், கழகத்தின் வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோர் மாலை அணிவித்து உரையாற்றினர்.

அங்கு அமைக்கப்பட்டு இருந்த கழகக் கொடிகம்பத்தில் தலித் விடுதலைக் கட்சி நிறுவனர் செங்கோட்டையன் கழக கொடி யினை ஏற்றினார். தொடர்ந்து ஊர்வலம் வடவள்ளி சமத்துவபுரம் சென்று பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். ஊர்வலமாக சத்தி மு.பாளையம் பகுதிக்குச் சென்றனர். கோம்பு பள்ளம் பகுதியில் குமார் அனைவருக்கும் தேனீர் ஏற்பாடு செய்து இருந்தார். பூங்கொடி கழகக் கொடியினை ஏற்றினார். அங்கிருந்து தாசிரிபாளையம் பகுதிக்கு சென்றனர். அங்கு அமைக்கப்பட்டு இருந்த பெரியார் படத்திற்கு செல்வக்குமார் மாலை அணிவித்தார். அங்கு அனைவருக்கும் மதிய உணவினை காசிபாளையம் தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர். மதிய உணவிற்குப் பின் தோழர்கள் ஊர்வலமாக கூடக்கரை பகுதிக்கு சென்றனர். முருகேசு கழக கொடியினை ஏற்றினார்.

அடுத்து சமத்துவபுரம் பகுதிக்கு தோழர்கள் சென்று பெரியார் சிலைக்கு இரமேசு மாலை அணிவித்தார். ஊர்வலம் நம்பியூர் பேருந்து நிலையம் அடைந்தது. அங்கு கழகக் கொடியினை கோட்டுபுள்ளாம்பாளையம் சூர்யா ஏற்றினார். நம்பியூர் பெரியார் சிலைக்கு இராம. இளங்கோவன் மற்றும் தமிழ்நாடு அறிவியில் மன்றம் சுந்தரம் ஆசிரியர் ஆகியோர் மாலை அணிவித்தனர். ஊர்வலம் அளுக்குளி பகுதிக்கு வந்து அங்கு இருந்த கழக கம்பத்தில் அளுக்குளி தங்கம் கழக கொடியினை ஏற்றினார். ஊர்வலம் கோட்டு புள்ளாம் பாளையம் பகுதிக்கு சென்றது. அங்கு கழக கொடியினை நதியா ஏற்றி வைத்த பின் ஊர்வலம் நிறைவடைந்தது. இங்கு அனைவருக்கும் கிளை கழகத் தோழர்கள் தேனீர் ஏற்பாடு செய்து இருந்தனர். ஊர்வலத்தின் பல பகுதிகளில் கன மழை பெய்த போதும் பெரியார் பிஞ்சுகள் அறிவுக்கனல், யாழ்திலீபன், யாழினி ஆகியோர் தொடர்ந்து ஊர்வலத்தில் பங்கெடுத்தனர். ஊர்வலத் திற்கு தேவையான ஏற்பாடுகளை மாவட்ட பொறுப்பாளர்கள் செய்து இருந்தனர்.

## ‘தேசத் தந்தை’க்கு அவமானம் : காந்தி சிலைக்கு மாலை போட வந்தவர்கள் கைது!

தேசத் தந்தை காந்தி பிறந்த நாள் விழாவில் கடற்கரையில் உள்ள காந்தி சிலைக்கு மாலை அணிவிக்க தடை விதித்திருக்கிறது தமிழக காவல்துறை.

‘கவுரி லங்கேஷ் கொலையும் காந்தி கொலையும் ஒன்றே’ என முழக்கமிட்டது சட்ட விரோதமாம்! கூறுகிறது காவல் துறை.

மாலையிட வந்த திராவிடர் விடுதலைக் கழகம், மார்க்சிய லெனினிய மக்கள் விடுதலை,மாணவர் மன்றம், காஞ்சி மக்கள் மன்றம், பாப்புலர் பிரண்ட் அமைப்பினர், எழுத்தாளர்கள், பேராசிரியர்களை காந்தி சிலைக்கு மாலையிடாமல் தடுத்து கைது செய்துள்ளது காவல்துறை!

‘சுதந்திரத்துக்கு’ப் பிறகு காந்தி பிறந்த நாளில் காந்தி சிலைக்கு மாலை அணிவிக்கத் தடை செய்த ஒரே மாநிலம் தமிழ்நாடு என்ற கின்னஸ் சாதனையை செய்து முடித்திருக்கிறது எடப்பாடி ஆட்சியும் அதன் காவல்துறையும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 5th October 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN